இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் தொகுப்பு வீடுகளுக்கான ஓர் அலகிற்கான உதவித் தொகை மற்றும் கச்சா வீடு மேம்பாட்டிற்கான உதவித் தொகையை உயர்த்துதல் – கான்கிரீட் கூரை அமைப்பதற்கான மானியத் தொகையை ரூ.12,000/–லிருந்து ரூ.20,000/–ஆக 1.4.2008 முதல் உயர்த்துதல்

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(மஅதி1) துறை

அரசாணை(நிலை) எண். 91 நாள்: 6.6.2008

படிக்கப்பட்டவை:

1. அரசாணை(நிலை) எண்.146, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 11.10.2006.
2. ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகத்தின் இணைச் செயலாளர் அவர்களின் நே.மு.கடித எண்.G–20011/1/2008-RH, நாள் 1.4.2008.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண். 46330/ஐஏஒய்.1/2007, நாள் 27.4.2008.

------

**ஆணை:**

படிக்கப்பட்டவை ஒன்றில் காணும் அரசாணையின்படி 2006–07–ஆம் ஆண்டிலிருந்து இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு கான்கிரீட் கூரை அமைப்பதற்காக மாநில அரசு கூடுதலாக வழங்கும் தொகையை ரூ.12,000/– ஆக நிர்ணயித்து வழங்கப்பட்டு வருகிறது.

2. படிக்கப்பட்டவை இரண்டில் காணும் மத்திய அரசின் கடிதத்தில், 1.4.2008 முதல், இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் தொகுப்பு வீடுகளுக்கு வழங்கப்படும் ஓர் அலகிற்கான (unit) உதவித் தொகை சாதாரண தரையில் (plains) ரூ.25,000/–லிருந்து ரூ.35,000/– ஆகவும், மலைப் பகுதி / கடின தரையில் (hilly / difficult areas) ரூ.27,500/–லிருந்து ரூ.38,500/– ஆகவும், கச்சா வீடுகளை மேம்படுத்துவதற்கான உதவித் தொகை ரூ.12,500/–லிருந்து ரூ.15,000/– ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

...2

3. 2008–09–ம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு அமைச்சர்(ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சி) அவர்கள், இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்படும் தொகுப்பு வீடுகளுக்கு, கான்கிரீட் கூரை அமைப்பதற்காக ஒரு வீட்டிற்கு வழங்கப்படும் உதவித் தொகையை, 1.4.2008 முதல் ரூ.12,000/–லிருந்து ரூ.20,000/–ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

4. மேற்கூறியவற்றின் அடிப்படையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் ஒரு வீட்டிற்கு அனுமதிக்கப்படும் தொகையை நிர்ணயித்து, அதனை 1.4.2008 முதல் நடைமுறைப்படுத்த ஆணை வேண்டி, அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்து பின்வருமாறு ஆணையிடுகிறது :

(1) 2008–09–ஆம் ஆண்டு முதல் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் தொகுப்பு வீடுகளுக்கான உதவித் தொகை ஒரு வீட்டிற்கு கீழ்க்காணுமாறு நிர்ணயிக்கப்படுகிறது:

<u>சாதாரண தரையில்</u>

| | |
|---|---|
| ஒரு வீட்டிற்கான மொத்த உதவித் தொகை | **–ரூ.55,000/–** |
| மத்திய அரசின் பங்கு | – ரூ.26,250/– |
| மாநில அரசின் பங்கு | – ரூ. 8,750/– |
| மற்றும் RCC கூரை அமைப்பதற்கான மாநில அரசின் கூடுதல் நிதி | – ரூ.20,000/– |

<u>மலைப்பகுதி / கடின தரையில்</u>

| | |
|---|---|
| ஒரு வீட்டிற்கான மொத்த உதவித் தொகை | **– ரூ. 58,500/–** |
| மத்திய அரசின் பங்கு | – ரூ. 28,875/– |
| மாநில அரசின் பங்கு | – ரூ. 9,625/– |
| மற்றும் RCC கூரை அமைப்பதற்கான மாநில அரசின் கூடுதல் நிதி | – ரூ.20,000/– |

(2) 2008–09–ஆம் ஆண்டு முதல் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கச்சா வீடுகளை மேம்படுத்துவதற்கு வழங்கப்படும் உதவித் தொகை மத்திய அரசு நிர்ணயித்துள்ளபடி ரூ.12,500/–லிருந்து ரூ.15,000/– ஆக உயர்த்தப்படுகிறது.

(3) இவ்வாறு உயர்த்தப்பட்ட தொகை 2008–09ஆம் ஆண்டு முதல் அனுமதிக்கப்பட்ட வீடுகளுக்கு மட்டும், 1.4.2008 முதல் வழங்கப்படும்.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண். 124/DS(B)/08, நாள் 30.5.2008–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி,**
சிறப்பு ஆணையர் மற்றும் அரசு
செயலாளர்.